# PONDICHERRY UNIVERSITY

(A Central University)

*R.Venkataraman Nagar, Kalapet, Puducherry - 605 014*

*P.SUBRAMANIAN, B.Com., MBA,*
DEPUTY REGISTRAR (ADMN.)

*R.V. Nagar, Kalapet*
Puducherry - 605 014


**Ref.No.PU/ESTT/NT10/2011-12/380** **Date: 05.12.2011**

## CIRCULAR

**Sub:** Brochure on "Awareness Campaign" about the duties and functions and the powers of National Commission for Scheduled Castes, Government of India – Reg.

-----

The Brochure on "Awareness Campaign" (in Tamil) about the duties and functions and the powers of National Commission for Scheduled Castes, Government of India received from the National Commission for Scheduled Castes, Government of India, Chennai is circulated below for information.

P. Subramanian 5/12
DEPUTY REGISTRAR (ADMN.)

All Directors/Deans/HODs/Coordinators/Officers ... for circulation among staff
Pondicherry University
Puducherry 605 014

# NATIONAL COMMISSION
# FOR
# SCHEDULED CASTES

## AWARENESS
## CAMPAIGN

B WING, 5th FLOOR, LOKNAYAK BHAWAN
NEW DELHI - 110 003.

TEL / FAX : 24625378
TOLL FREE : 1800118888
Website : http://ncsc.nic.in



*"My fight against untouchability is a fight against the impure in humanity"*

Mahatma Gandhi



*"Our's is the struggle not for money or power but for the reclamation of human dignity"*

Babasaheb Dr. B. R. Ambedkar



*Message From Hon'ble Chairman*

*National Commission for Scheduled Castes is Committed to the full implementation of the various acts like the PCR Act, 1955 and SC and ST (POA) Act, 1989. The NCSC will endeavour to ensure that the economic development schemes for SC population are implemented as per guidelines and every penny of SCP/SCSP is spent appropriately exclusively for the benefit of Scheduled Castes. It also endeavours to ensure that reservation is implemented at every level, strictly as per government rules and regulations.*

*I solicit cooperation of all concerned in the matter. People may report the non-implementation of any rule to the NCSC without any fear.*

*P.L. PUNIA*
*CHAIRMAN, NCSC*

அரசமைப்புச் சட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு பாதுகாப்புகள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 89வது திருத்தம், 19–2–2004ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்ததையடுத்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான முன்னாள் தேசிய ஆணையம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அரசமைப்புச் சட்டத்தின் 338ஆம் பிரிவின் கீழ் தேசிய ஆதிதிராவிடர் ஆணையம் அமைக்கப் பட்டுள்ளது.

**ஆணையத்தின் கடமைகள் மற்றும் அலுவல்கள் :**

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 338ஆம் பிரிவு, ஆணையத்திற்கு, கீழ்க்காணும் கடமைகளையும், அலுவல்களையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

(a) அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அல்லது தற்போது செயலில் உள்ள ஏனைய பிற சட்டத்தின் கீழ் அல்லது அரசின் ஏதேனும் ஆணையின் கீழ், ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் தொடர்பான அனைத்து விவகாரங்களையும் ஆராய்தல், கண்காணித்தல் மற்றும் அத்தகைய பாதுகாப்புகள் செயல்படுத்தப்படுவதை மதிப்பீடு செய்தல்;

(b) ஆதி திராவிடர்களுக்கு உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் தவிர்க்கப்படுவது தொடர்பான குறிப்பிட்ட புகார்கள் குறித்து புலனாய்வு செய்தல்;

(c) ஆதி திராவிடர்களின் சமூக–பொருளாதார மேம்பாடு குறித்து திட்டமிடுகிற நடவடிக்கையில் பங்கேற்று, ஆலோசனை அளித்தல் மற்றும் மத்திய அரசின் கீழ் மற்றும் யாதொரு மாநில அரசின் கீழ் அவர்களுடைய மேம்பாட்டில் ஏற்படுகிற முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்தல்;

(d) ஆண்டுதோறும் மற்றும் ஆணையம் உரியது என்று கருதுகிற அத்தகைய பிற சமயங்களில், அந்தப் பாதுகாப்புகள் செயல்படுத்தப்படுவது குறித்த அறிக்கைகளை, குடியரசுத் தலைவரிடம் அளித்தல்.

(e) அந்தப் பாதுகாப்புகளை, பயனுள்ள முறையில் செயல் படுத்துவதற்காக, மத்திய அரசு அல்லது யாதொரு மாநில அரசு

மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஆதிதிராவிடரின் பாதுகாப்பு, நலன் மற்றும் சமூக–பொருளாதார மேம்பாட்டுக்கான ஏனைய நடவடிக்கைகள் ஆகியவை குறித்து அத்தகைய அறிக்கைகளில் பரிந்துரைத்தல் மற்றும்

(f) நாடாளுமன்றம் இயற்றிய யாதொரு சட்டத்தின் விதித்துறைகளுக்குட்பட்டு, குடியரசுத் தலைவர் விதியின் மூலம் குறிப்பிடுகிறவாறு, ஆதி திராவிடர்களின் பாதுகாப்பு, நலன், மேம்பாடு மற்றும் முன்னேற்றம் தொடர்பான அத்தகைய பிற அலுவல்களைச் செய்தல்.

## ஆணையத்தின் அதிகாரங்கள் :

5–ஆம் பகுதியைச் சேர்ந்த (b) துணைப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் புகார் குறித்து விசாரணை செய்வதற்காக, ( a ) துணைப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் குறித்து புலனாய்வு செய்கிறபோது, வழக்கு ஒன்றை விசாரணை செய்கிற உரிமையியல் நீதிமன்றம் ஒன்றின் அனைத்து அதிகாரங்களையும், ஆணையம் பெற்றுள்ளது. குறிப்பாக கீழ்க்காணும் விவகாரங்கள் தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் பெற்றுள்ளது.

(a) இந்தியாவின் எந்தவொரு பகுதியைச் சேர்ந்த எந்தவொரு நபரையும் அழைப்பாணை அனுப்பி வருமாறு செய்து, உறுதிமொழி (சத்தியப் பிரமாணம்) அளிப்பதன் பேரில், அவரை விசாரணை செய்தல்;

(b) ஏதேனும் ஆவணங்களைக் கண்டுபிடித்து அளிக்குமாறு கோருதல் ;

(c) உறுதிமொழிப் பத்திரங்களின் பேரில் சாட்சியத்தைக் கோருதல்;

(d) ஏதேனும் நீதிமன்றத்திடம் அல்லது அலுவலகத்திடம் ஏதேனும் அரசு பதிவுருவை அல்லது அதன் நகலை அளிக்குமாறு கோருதல் ;

(e) சாட்சிகளையும், ஆவணங்களையும் விசாரணை செய்வதற்காக, அழைப்பாணைகளை / கடிதங்களை அனுப்புதல்;

(f) விதியின் மூலம் குடியரசுத் தலைவர் தீர்மானிக்கக் கூடிய ஏனைய பிற விவகாரம்.



## மத்திய அரசும், மாநில அரசுகளும், ஆணையத்துடன் கலந்தாலோசித்தல்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 338ஆம் பிரிவின் 9ஆம் பகுதிக்கிணங்க, மத்திய அரசும், ஒவ்வொரு மாநில அரசும் ஆதிதிராவிடர்களை பாதிக்கிற அனைத்து முக்கியமான கொள்கை விவகாரங்களில், ஆணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

**கண்காணித்தல் :**

அரசமைப்புச் சட்டத்தின் கீழ் வகைசெய்யப்பட்டுள்ள பாதுகாப்புகள் தொடர்பான விவகாரங்களை, ஆய்வு செய்கிற போது, ஆணையம், பாதுகாப்புகள் செயல்படுத்தப் படுவதைக் கண்காணிக்கும். அவற்றுள், கீழ்க்கண்டவை அடங்கும் ;

(a) தீண்டாமை ஒழிப்புக்கான பாதுகாப்புகளை, பிரிவு 17 வழங்குகிறது;

(b) மனிதர்கள், இழிதொழிலில் மற்றும் கட்டாய தொழிலாளர் (ஆதி திராவிடர்களைப் பொறுத்த வரையில்) முறையில் ஈடுபடுத்தப்படுவதை, பிரிவு 23 தடை செய்கிறது;

(c) குழந்தை தொழிலாளர் (ஆதி திராவிடர்களைப் பொறுத்த வரையில்) முறை தடைசெய்யப்படுவதற்கு பிரிவு 24 வகை செய்கிறது;

(d) கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீட்டுக்கான பாதுகாப்புகளுக்கு (மாணவர் சேர்க்கை) பிரிவு 15(4) வகை செய்கிறது;

(e) பணி நியமனங்களில் அல்லது பதவிகளில் ஆதிதிராவிடருக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கான பணிப் பாதுகாப்புகளுக்கு, பிரிவு 16(4), 16(4) A மற்றும் 335 வகை செய்கிறது, மற்றும்

(f) பல்வேறு சட்டங்கள் குறித்த செயல்பாடு அவையாவன :

(1) சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989

(3) கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம் 1976 (ஆதி திராவிடர்களைப் பொறுத்த வரையில்).

(4) குழந்தை தொழிலாளர் (தடை செய்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1986 (ஆதிதிராவிடர்களைப் பொறுத்த வரையில்).

(5) ஆதிதிராவிடருக்குச் சொந்தமான நிலங்களின் உடைமை உரிமை மாற்றம் மற்றும் மீட்பு தொடர்பான மாநிலச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள்

(6) குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் 1948 (ஆதி திராவிடர்களைப் பொறுத்த வரையில்).

(7) மனிதக் கழிவுகளை அகற்றும் துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் மற்றும் உலர் கழிப்பிடங்கள் கட்டுதல் (தடைச் சட்டம்) சட்டம், 1993.

## ஆணையம் செயல்படும் முறை :

தேசிய ஆதிதிராவிடர் ஆணையம், புதுடில்லியிலுள்ள அதன் தலைமையிடத்திலும், சில மாநிலங்களில் அமைந்துள்ள ஆணையத்தின் மாநில அலுவலகங்களிலும் செயல்படுகிறது.

ஆதி திராவிடருக்கான தேசிய ஆணையம், 12 மாநில அலுவலகங்களைக் கொண்டுள்ளது. அது, மாநிலங்களில் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில், ஆதி திராவிடர் நலன் குறித்த கொள்கை உருவாக்கம் மற்றும் வழிகாட்டிக் குறிப்புகள் வெளியிடுதல் குறித்து கண்காணிக்கிறது. அவை தொடர்பான நடவடிக்கை முன்னேற்றம் குறித்து ஆணையத்திற்குத் தெரிவிக்கிறது. ஆதி திராவிடர்களின் நலனை பாதிக்கிற வகையில் மாநில அரசு / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் எடுக்கிற கொள்கை முடிவுகள், தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. ஆணையம், பாதுகாப்புகள் செயல்படுத்தப்படுவது தொடர்பான அதனுடைய அறிக்கைகளை, குடியரசுத் தலைவரிடம் அளிக்கிறது. அந்தப் பாதுகாப்புகளை பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்காக, மத்திய அரசும், மாநில அரசுகளும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கிறது. ஆதிதிராவிடரின் பாதுகாப்பு, நலன் மற்றும் சமூக—



பொருளாதார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கிறது. அறிக்கைகள், நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் வைக்கப்படுகின்றன. இந்த விவகாரம், மாநில அரசுடன் தொடர்புடையதாக இருந்தால், இந்த அறிக்கையின் நகல் ஒன்று, மாநில ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த அறிக்கை, மாநிலச் சட்டமன்றத்தில் வைக்கப்படுகிறது.

## அரசுப் பணிகளில் ஆதிதிராவிடருக்கான இட ஒதுக்கீடு

மத்திய அரசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு சாதகமாக, அரசுப் பணிகளில், ஏதேனும் வகை அல்லது வகைகளைச் சேர்ந்த பதவிகளுக்கு, நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு அளித்தல் ஆகிய விவகாரங்களில் இடஒதுக்கீடுகளுக்கு வகை செய்ய, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 16(3), 16(4) மற்றும் 16(4–A ) பிரிவின்படி, அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

அதற்கிணங்க, மத்திய அரசு, ஆதிதிராவிடருக்கு, பகிரங்கப்போட்டி (மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது பகிரங்கப் போட்டித் தேர்வு) மூலம், அனைத்திந்திய அடிப்படையில், நேரடி நியமனத்தில் 15 சதவீத இடஒதுக்கீட்டையும், பகிரங்க போட்டிகள் நீங்கலாக ஏனையவற்றுக்கு 16.2 சதவீத இடஒதுக்கீட்டையும் நிர்ணயித்துள்ளது. C தொகுதி மற்றும் D தொகுதி பதவிகளுக்கு நேரடி நியமனம், இயல்பாக, உள்ளூர் நபர்களை அல்லது வட்டார அடிப்படையிலான நபர்களை ஈர்ப்பதால், இந்தப் பதவிகளுக்கான இடஒதுக்கீடு, அந்தந்த மாநிலங்களிலுள்ள / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வீதாச்சாரத்தின்படி வரையறுக்கப்படுகிறது.

அதைப்போன்றே, மத்திய அரசுப் பணியில், மிகக் குறைந்த பதவித்தரமான A தொகுதியைச் சேர்ந்த பதவிகள் வரையிலான அனைத்துப் பதவிகளிலும், ஆதிதிராவிடருக்கு பதவி உயர்வில், 15 சதவீத இட ஒதுக்கீடு வரையறுக்கப் பட்டுள்ளது. அந்தப் பதவிக்கு நேரடி நியமனம் ஏதேனும் இருக்குமாயின், அது, 75 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது.

மாநில அரசின் பணிகளைப் பொறுத்தவரையில், அந்தந்த

மாநிலங்களின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வீதாச்சாரத்திற்கு ஏற்ப, நேரடி நியமனத்திலும், பதவி உயர்வுகளிலும், இடஒதுக்கீடு வரையறுக்கப்பட்டுள்ளது.

அரசுப் பணிகளில் இடஒதுக்கீட்டு முறையை செயல்படுத்துவதற்காக, பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் விதித்துறைகளின்படி, பதவியை அடிப்படையாகக் கொண்ட இடஒதுக்கீட்டு அலுவலர் தொகுதி முறைப்பட்டியலை நிறுவனங்கள் வைத்து வருகின்றன.

## ஆதிதிராவிடர் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989 மற்றும் ஆதிதிராவிடர் & பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) விதிகள், 1995

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த எவரேனும் கீழ்க்காணும் குற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டால், அதாவது,

(1) வெறுக்கத்தக்க பொருளை கட்டாயப்படுத்து உண்ணுமாறு செய்தல், கட்டாயப்படுத்தி, பகிரங்கமாக ஊர்வலமாகச் செல்லும்படி செய்தல், உடைகள் முதலியவற்றை நீக்குதல் போன்ற மக்களின் மரியாதையை கெடுக்கிற ஏதேனும் நடவடிக்கை.

(2) பிச்சை எடுக்கும்படி கட்டாயப்படுத்துதல் அல்லது நிலம், கட்டிடம் முதலியவற்றிலிருந்து ஒருவரின் உடைமை உரிமையைப் பறித்தல் மற்றும் வெளியேற்றுதல்.

(3) பெண் ஒருவரை மானபங்கம் செய்தல் மற்றும் பாலியல் ரீதியாக துன்புறுத்துதல்.

(4) வாக்களிக்கிற நடத்தையை பாதிக்கிற வகையில் பலப் பிரயோகம் செய்தல் அல்லது அச்சுறுத்துதல்.

(5) பொய்யான, கெடுதலான மற்றும் வெறுப்பூட்டுகிற சட்ட நடவடிக்கைகள் முதலியவை.

(6) பொது இடம் ஒன்றுக்குச் செல்கிற வழக்கமான வழியுரிமையை மறுத்தல்.



ஆகியவை நேர்ந்தால், அவர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989. விதித்துறைகளின் கீழ் சட்ட நடவடிக்கை தொடருவதற்காக, அருகிலுள்ள காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும்.

காவல் நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கிற அதிகாரி, புகாரின் பேரில், நடவடிக்கை எதுவும் எடுக்காவிடில், மாவட்ட மாஜிஸ்டிரேட்டை அல்லது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும். இன்னும் மனநிறைவளிக்காவிட்டால், 1800118888 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும் அல்லது தேசிய ஆதிதிராவிடர் ஆணையம், மத்திய அரசு 5ஆம் தளம், லோக் நாயக் பவன், கான் மார்கெட், புதுடில்லி – 110 003 என்ற முகவரிக்கு எழுதவும். நீங்கள், உங்களுடைய புகாரை, 011 – 24632298 என்ற எண்ணுக்கு நிகரிச் செய்தி மூலமாகவும் அனுப்பலாம்.

தீண்டாமை, சட்டரீதியாக ஒழிக்கப்பட்டுள்ளது. எந்த வகையிலும் அதை நடைமுறைப்படுத்துவது, சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஓர் ஓர்ந்தறிகிற குற்றமாகும். அதற்கு ஆறுமாதங்கள் வரையில் சிறைதண்டனை விதிக்கத்தக்கதாகும்.

அரசுப் பணியாளர் ஒருவர் அவருடைய அலுவல்களை வேண்டுமென்றே புறக்கணித்தால், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989இன் கீழ், அவருக்கு ஓராண்டு வரையில் சிறை தண்டனை விதிக்கப்படலாம்.

விவரங்களைப் பெறவும், உங்களுடைய கோரிக்கைகளைத் தீர்வு செய்யவும், சம்பந்தப்பட்ட மாவட்ட மாஜிஸ்டிரேட், உட்கோட்ட மாஜிஸ்டிரேட் அல்லது மாவட்ட சமூகநல அதிகாரியைத் தொடர்பு கொள்ளவும்.

எவரேனும் ஒருவர், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டால், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் மற்றும் விதிகளின் கீழ், அவர், நிவாரணம் மற்றும் பிற வசதிகளைப் பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

## நிவாரணத் தொகையைப் பெறுவதற்கான வரையறைகள்

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) விதி 1995ஐ சேர்ந்த 12(4)ஆம் விதியின் கீழ் நிவாரணத்தொகையைப் பெறுவதற்கான வரையறைகள்

| | |
|---|---|
| 1. உண்ணத்தகாத அல்லது வெறுக்கத்தக்க பொருளை அருந்துதல் அல்லது உண்ணுதல் பிரிவு 3(1)(i )<br>2. காயம், அவமதிப்பு அல்லது தொல்லை செய்தல் பிரிவு 3(1) ( ii )<br>3. மதிப்பை குறைக்கிற செயல் (பிரிவு 3(1) ( iii ) | பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் குற்றத்தின் தன்மை ; கடுமை மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட மரியாதைக் குறைவு, அவமதிப்பு, காயம் மற்றும் மதிப்பு குறைவு ஆகியவற்றுக்கு ஏற்ப ரூபாய் 25,000 அல்லது அதற்கு மேல் வழங்கப்பட வேண்டும் ; அது பற்றிய விவரம் வருமாறு :<br>குற்றப்பத்திரிகை, நீதிமன்றத்திற்கு அனுப்பப் பட்டபோது 25% குற்றஞ்சாட்டப்பட்டவர், கீழ் நீதிமன்றத்தால் தண்டனை அளிக்கப்படுகிறபோது 75% |
| 4. நிலத்தை, தவறான முறையில் அனுபோகத்தில் எடுத்துக் கொள்ளுதல் அல்லது நிலத்தை சாகுபடி செய்தல் முதலியவை (பிரிவு 3(1) (iv) | குற்றத்தின் தன்மை மற்றும் கடுமையைப் பொறுத்து, குறைந்த அளவு ரூபாய் 25,000/– அல்லது அதற்கும் மேல் அவசியம் ஏற்படுகிறபோது, |
| 5. நிலம், வளாகம், மற்றும் நீர் (பிரிவு 3(1) (v) | அரசின் செலவில், நிலம்/வளாகம்/நீர் வழங்கல் மீட்கப்படவேண்டும் குற்றப் பத்திரிகை, நீதிமன்றத்திற்கு அனுப்பப் படுகிறபோது, முழுத்தொகையும் வழங்கப்படவேண்டும். |
| 6. பிச்சையெடுக்குமாறு கட்டாயப்படுத்துதல் அல்லது கொத்தடிமை முறை (பிரிவு3(1)(vi) | பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் குறைந்த அளவு ரூபாய் 25,000/– முதல் தகவல் அறிக்கை நிலையில் 25% தொகையும், கீழ் நீதிமன்றத்தால் தண்டனை அளிக்கப்படுகிற நிலையில் 75% தொகையும் வழங்கப்பட வேண்டும். |



| | |
|---|---|
| 7. வாக்களிக்கிற உரிமை தொடர்பானது (பிரிவு 3(1) ( vii ) | குற்றத்தின் தன்மை மற்றும் கடுமையைப் பொறுத்து, பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூபாய் 20,000/– வரையில் வழங்கப்பட வேண்டும். |
| 8. பொய்யான, கெடுதலான மற்றும் வெறுக்கத்தக்க சட்ட நடவடிக்கைகள் (பிரிவு 3(1) (viii )<br>9. பொய்யான மற்றும் அற்பமான தகவல் அளித்தல், (பிரிவு 3(1) (ix) | ரூபாய் 25,000/– அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் விசாரணை முடிவுக்கு வந்த பின்னர், உண்மையான வழக்கு செலவுகள் மற்றும் சேதங்கள் இவை இரண்டில் எது குறைவோ அது வழங்கப்படவேண்டும். |
| 10. அவமதிப்பு, அச்சுறுத்தல் சிறுமைப்படுத்துதல் (பிரிவு 3(1)(x) | குற்றத்தின் தன்மையைப் பொறுத்து பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூபாய் 25,000 வரையில் வழங்கப்பட வேண்டும். குற்றப்பத்திரிகை, நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகிறபோது 25% தொகையும், தண்டனை அளிக்கப்படுகிறபோது, எஞ்சியுள்ள தொகையும் வழங்கப்பட வேண்டும். |
| 11. பெண் ஒருவரை மானபங்கம் செய்தல் (பிரிவு 3(1)(xi)<br>12. பெண் ஒருவரை, பாலியல் ரீதியாக துன்புறுத்துதல் (பிரிவு 3(1)(xii) | குற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூபாய் 50,000 வழங்கப்பட வேண்டும். மருத்துவப் பரிசோதனை முடிந்த பின்னர் 50% தொகையும், விசாரணையின் முடிவுக்குப் பின்னர் எஞ்சியுள்ள தொகையும் வழங்கப்படவேண்டும். |
| 13. நீரை மாசுபடச் செய்தல் (பிரிவு 3(1) (xiii) | ரூபாய் 1,00,000 வரையில் அல்லது நீரை மாசுபடச் செய்கிறபோது, அதை தூய்மை செய்வதற்கான செலவு உட்பட இயல்பான நிலைக்கு மீட்டுக் கொண்டுவருவதற்கான முழு செலவுத் தொகையும் வழங்கப்பட வேண்டும். மாவட்ட நிர்வாகம் பொருத்தமானது என்று கருதுகிற நிலையில் தொகை வழங்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 14. வழக்கமான வழியுரிமையை மறுத்தல் (பிரிவு 3(1)(xiv) | ரூபாய் 1,00,000 வரையில் அல்லது வழியுரிமையை மீட்பதற்கான முழு செலவு மற்றும் இழப்பு ஏதேனும் ஏற்படுமாயின், அதற்குரிய முழு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவேண்டும். குற்றப்பத்திரிகை, நீதிமன்றம் அனுப்பப்படுகிறபோது 50% தொகை வழங்கப்பட வேண்டும். கீழ் நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்படுகிற போது 50% தொகை வழங்கப்படவேண்டும். |
| 15. ஒருவரை, வீட்டை துறக்குமாறு செய்தல் (பிரிவு 3(1)(xv) | தங்குவதற்கான இடத்தை / உரிமையை மீட்டல் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வருக்கும் ரூபாய் 25,000 இழப்பீடு வழங்குதல் வீடு ஏதேனும் இடித்து தகர்க்கப் பட்டிருந்தால், அரசின் செலவில், வீட்டை மீண்டும் கட்டிக் கொடுத்தல், குற்றப் பத்திரிகை, கீழ் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகிறபோது, முழுத்தொகையும் வழங்கப்பட வேண்டும். |
| 16. பொய் சாட்சியம் அளித்தல் (பிரிவு 3(2) (i) மற்றும் (ii) | ஏற்பட்ட இழப்பு அல்லது துயரத்திற்கான முழு இழப்பீட்டு தொகையாக குறைந்த அளவாக ரூபாய் 1,00,000–மாவது வழங்கப்படவேண்டும். குற்றப் பத்திரிகை நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகிற போது, 50% தொகை வழங்கப்பட வேண்டும். கீழ் நீதிமன்றம் தண்டனை வழங்குகிறபோது, 50% தொகை வழங்கப்படவேண்டும். |



| | |
|---|---|
| 17. இந்திய தண்டனை விதிக் கோவையின் கீழ் வருகிற குற்றங்களைச் செய்கிறபோது, 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவிற்கு சிறை தண்டனை விதிக்கப்பட வேண்டும். (பிரிவு 3(2) (v) | குற்றத்தின் தன்மை மற்றும் கடுமையைப் பொறுத்து பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் அவரைச் சார்ந்திருப்பவருக்கு மற்றும் பாதிக்கப்பட்டவருக்கும், அவரைச் சார்ந்திருப்பவருக்கும் குறைந்த அளவாக, ரூபாய் 50,000 வழங்கப்படவேண்டும். விவர அட்டவணையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப் பட்டிருந்தாலன்றி, மற்றபடி, இத்தொகை, வேறுபடும். |
| 18. அரசுப் பணியாளரால் பாதிக்கப்படுதல் (பிரிவு 3(2)) | ஏற்பட்ட சேதங்கள், அல்லது இழப்பு அல்லது துயரத்திற்காக, முழு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும். குற்றப் பத்திரிகை, நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகிறபோது, 50% தொகையும், கீழ் நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்படுகிறபோது 50% தொகையும் வழங்கப்படவேண்டும். |
| 19. ஏலாமையுறுதல், உடல் ரீதியான உள ரீதியான ஏலாமை பற்றிய விளக்கங்கள், மத்திய அரசின் நல அமைச்சகத்தி; 6–8–1986 ஆம் நாளிட்ட 4–2/83 HW III ஆம் எண்ணுள்ள அறிவிக்கை யில் (அவ்வப்போது திருத்தப்பட்ட வாறான) அடங்கியுள்ளன. அறிவிக்கையின் நகல் ஒன்று, இணைப்பு – II–ல் உள்ளது.<br>(a) 100 சதவீத ஏலாமை<br>(i) ஒரு குடும்பத்தின் வருமானம் ஈட்டாத உறுப்பினருக்கு | குற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும், குறைந்த அளவு ரூபாய் 1,00,000 வழங்கப்பட வேண்டும். முதல் தகவல் அறிக்கை நிலையில் 50 சதவீதத் தொகையும், குற்றப்பத்திரிகை நிலையில் 25 சதவீதத் தொகையும், குற்றப்பத்திரிகை நிலையில் 25 சதவீதத் தொகையும் கீழ் நீதிமன்றம் தண்டனை வழங்குகிறபோது 25 சதவீதத் தொகையும் வழங்கப்படவேண்டும். |
| (ii) வருமானம் ஈட்டுகிற குடும்ப உறுப்பினருக்கு | குற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் குறைந்த அளவு ரூபாய் 2,00,000 வழங்கப்படவேண்டும். |

| | | |
|---|---|---|
| | | முதல் தகவல் அறிக்கை/மருத்துவப் பரிசோதனை நிலையில் 50 சதவீதத் தொகை வழங்கப்படவேண்டும். கீழ் நீதிமன்றம் தண்டனை வழங்குகிற போது, 25 சதவீதத் தொகை வழங்கப்படவேண்டும். |
| (b) | ஏலாமை, 100 சதவீதத்திற்கும் நிறைவாக இருக்கிற நேர்வில், | மேலே a(i) மற்றும் (ii) ஆகியவற்றில் வரையறுக்கப் பட்டுள்ள வீதங்கள், அதே வீதாச்சாரத்தில் குறைக்கப்படும். தொகை வழங்குகிற நிலையும் அதே மாதிரியில் வழங்கப்படும். இருப்பினும், வருமானம் ஈட்டாத குடும்ப உறுப்பினருக்கு ரூபாய் 15,000–க்கு குறையாமலும் வருமானம் ஈட்டுகிற குடும்ப உறுப்பினருக்கு ரூபாய் 30,000–க்கு குறையாமலும் வழங்கப்படவேண்டும். |
| 20. | கொலை / மரணம் ஒரு குடும்பத்தின் வருமானம் ஈட்டாத உறுப்பினர் | ஒவ்வொரு நேர்விலும் குறைந்த அளவு ரூபாய் 1,00,000– வழங்கப்படவேண்டும். சவப்பரிசோதனை நடந்த பின்னர், 75 சதவீதத் தொகை வழங்கப்படவேண்டும். கீழ் நீதிமன்றம் தண்டனை வழங்கிய பின்னர், 25 சதவீதத் தொகை வழங்கப்படவேண்டும். |
| | வருமானம் ஈட்டுகிற குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு | ஒவ்வொரு நேர்விலும் குறைந்த அளவு ரூபாய், 2,00,000– வழங்கப்படவேண்டும். சவப்பரிசோதனை நடந்த பின்னர், 75 சதவீதத் தொகை வழங்கப்படவேண்டும். கீழ் நீதிமன்றம் தண்டனை வழங்கிய பின்னர், 25 சதவீதத் தொகை வழங்கப்படவேண்டும். |



| | | |
|---|---|---|
| 21. | கொலை, படுகொலை, கற்பழிப்பு, பெருமளவிலான கற்பழிப்பு, கும்பலாக வந்து கற்பழித்தல், நிலையான ஏலாமையை ஏற்படுத்துதல் மற்றும் கொள்ளை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர். | மேற்சொன்ன வகைப்பாட்டின் கீழ் நிவாரணத் தொகைகள் வழங்குவதுடன், அட்டூழியச் செயல் நடைபெற்ற மூன்று மாதங்களுக்குள் நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அது பற்றிய விவரம் வருமாறு :–<br>(i) மரணமடைந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவரின் விதவை மனைவி மற்றும் பிற சார்ந்திருப்போர் ஒவ்வொருவருக்கும் அல்லது மரணமடைந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவரின் பிற சார்ந்திருப்போர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,000–வீதம் உதவித்தொகை வழங்கப்பட வேண்டும்; அல்லது மரணமடைந்தவரின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு வேலை அளிக்கப்பட வேண்டும் ; அல்லது அவசியம் ஏற்பட்டால் ரொக்கம் கொடுத்து வாங்குவதன் மூலம் வேளாண்மை நிலம் மற்றும் வீடு வழங்கப்படவேண்டும்.<br>(ii) பாதிக்கப்பட்டவரின் குழந்தைகளின் கல்வி மற்றும் பராமரிப்பு குறித்த முழு செலவையும் ஏற்க வேண்டும். குழந்தைகள், ஆசிரமப்பள்ளிகளில் / உண்டி, உறைவிடப் பள்ளிகளில் சேர்க்கப்படலாம்.<br>(iii) மூன்று மாத கால அளவிற்கு பாத்திரங்கள், அரிசி, கோதுமை, பருப்பு, பயறு வகைகள் முதலியவை வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 22. வீடுகள் | முற்றிலுமாக அழிந்துபோதல் / எரிந்து போதல் | வீடு, எரிந்து போகிற அல்லது அழிந்து போகிற நேர்வில், அரசு செலவில், செங்கல்/ கல் கட்டுமான வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். |

## இழப்பீட்டுத் தொகையை உயர்த்துவது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சிறப்பு விதித்துறைகளும், பாதுகாப்புகளும் வகை செய்யப்பட்டுள்ளன. பல்வேறு நிலைகளில் தலையிட வேண்டிய ஆதிதிராவிடர் நலன் மற்றும் பயன்பெறுவதற்கான சிறப்புப்பகுதி (கூறு) திட்டத்தின் கீழ் சிறப்புத் திட்டங்களை உருவாக்குதல் உட்பட ஆதிதிராவிடரின் சமூக-பொருளாதார மற்றும் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்காக, சில சிறப்பு முயற்சிகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் வெவ்வேறு அமைச்சகங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மக்கள் தொகை சதவீதத்தின்படி, ஆதிதிராவிடர், பழங்குடியினருக்காக, ஒவ்வொரு திட்டத்திற்கும், தனியே நிதியொதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. சமுதாயத்தின் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கான சிறப்புப் பகுதி (கூறு) திட்டத்தின் நிதி, கருதிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை என்றும், சில சமயங்களில், மாநிலங்கள், அவற்றை, பிற நோக்கங்களுக்குப் பயன்படுத்துகின்றன என்றும், இவ்வாறு, எந்த நோக்கத்திற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு நிதி பயன்படுவதில்லை என்றும் ஆணையம் கருதுகிறது. விளைவுகள், திட்டத்தின் நோக்கங்களுக்கு ஏற்றவாறு இருப்பதில்லை. நெடுஞ்சாலைகள், வட்டச் சாலை, மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றின் கட்டுமானம் குறித்த செலவு, போட்டி விளையாட்டுகள் நடத்துதல் முதலியவை குறித்த செலவு போன்ற செலவினம் நியாயப்படுத்தப்படவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 338ஆம் பிரிவின் 5 (c) பகுதியின்படி, ஆணையம் ஆதிதிராவிடரின் சமூக-பொருளாதார மேம்பாடு குறித்த திட்ட நடவடிக்கையில் பங்கேற்று, ஆலோசனை வழங்கி, மத்திய அரசின், மற்றும் யாதொரு மாநில அரசின் கீழ் அவர்களுடைய மேம்பாட்டில் ஏற்படுகிற முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்வதுடன் அவற்றின் முன்னேற்றத்தையும் கண்காணிக்க வேண்டியுள்ளது.



## ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்காக, மத்திய அரசின் வெவ்வேறு அமைச்சகங்கள் / துறைகள் செயல்படுத்தி வருகிற நலத் திட்டங்கள்

ஆதிதிராவிடரின், நலனுக்காக, சமூக நீதி அதிகாரம் வழங்கல் அமைச்சகம், கீழ்க்காணும் திட்டங்களைக் கொண்டுள்ளது. (ஆதி திராவிடர் யாதொரு பயன் பெறுவதற்கான வருமான வரம்பை உயர்த்துவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது)

(i) பிரதம மந்திரியின் ஆதர்ஷ் கிராம திட்டத்தின் முன்னோடித் திட்டம் (மத்திய அரசு செலவுப் பொறுப்பேற்கும் திட்டம்)

(ii) பாபு ஜெகஜீவன்ராமின் சத்ரவாஸ் திட்டடம்

(iii) ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு, மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்பிற்கான படிப்புதவித் தொகை

(iv) தூய்மையற்ற வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் குழந்தைகளுக்கான மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்கான படிப்புதவித் தொகைகள்.

(v) ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு உயர்தர கல்விக்கான மத்திய அரசுத்துறையின் படிப்புதவித்தொகை வழங்கும் திட்டம்.

(vi) மனிதக் கழிவுகளை அகற்றுகிற துப்புரவுத் தொழிலாளர்களின் புதுவாழ்விற்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்.

(vii) ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்கு, மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி.

(viii) எம்.பில், பி.ஹெச்.டி. (M.Phil., Ph.D.,) போன்ற உயர்கல்வி தொடருவதற்காக, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைகள் வழங்குவதற்காக, ராஜீவ் காந்தியின் தேசிய பட்டதாரி ஆதரவூதியம் வழங்கும் மத்திய அரசுத் துறை திட்டம்.

(ix) ஆதி திராவிடருக்கான தேசிய அயல்நாட்டு படிப்புதவித்தொகை முதலியவை.

(x) குறைந்த படிப்பறிவுள்ள ஆதிதிராவிடர் பெண் குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் தகுதியை உயர்த்துதல்.

(xi) ஆதிதிராவிடர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக கற்பிக்கும் திட்டம்.

(xii) ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மெச்சத் தகுந்த கல்விபெற்ற மாணவர்களுக்கான டாக்டர் அம்பேத்கார் தேசிய தகுதி படிப்புதவித் தொகை திட்டம்.

(xiii) வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு, டாக்டர் அம்பேத்கார் தேசிய நிவாரணத் தொகை வழங்கும் திட்டம்.

(xiv) தேசிய ஆதிதிராவிடர் நிதியுதவி மேம்பாட்டு கழகம்.

பல்கலைக்கழக மானியக்குழு, ஆதி திராவிடருக்காக, கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

(i) தொழிற்கல்வி படிக்கிற ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான பட்டமேற்படிப்பு படிப்புதவித் தொகை.

(ii) ஆதிதிராவிடர் / பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான முனைவர் பட்ட மேற்படிப்பு படிப்புதவித் தொகை.

(iii) பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலுள்ள பட்டப்படிப்பு / பட்ட மேற்படிப்பு படிக்கிற ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள்.

(iv) தேசிய தகுதியுடைமைத் தேர்வில் கலந்து கொள்வதற்கு ஆயத்தப்படுத்துவதற்காக, ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு சிறப்பு வகுப்புகள்.

(v) அரசுப் பணியில் சேர்வதற்காக, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு சிறப்பு வகுப்புகள்.



## இந்திரா வீட்டு வசதித் திட்டம் (IAY)

ஆதி திராவிடர், பழங்குடியினர், கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேராத, வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ளவர்கள் ஆகியோருக்கு, உதவி மானியம் வழங்குவதன் மூலம், அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு உதவி செய்வதே இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் நோக்கமாகும்.

## பொன்விழா கிராம வேலை வாய்ப்புத் திட்டம் (SGSY)

இது, கிராமப் பகுதிகளில் / ஓரளவு நகர்ப்பகுதிகளில் வறுமையைத் தணிப்பதற்கான ஒரு முக்கியமான திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுகிற பயனீட்டாளர்களில், 50 சதவீதத்திற்குக் குறையாதவர்கள், ஆதி திராவிடர் / பழங்குடியினர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

## பிரதம மந்திரியின் வேலை வாய்ப்புத் திட்டம் (PMRY)

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், தொழில்கள், சேவை மற்றும் வணிகத் துறைகளில் சுய வேலை வாய்ப்பு முயற்சிகளை மேற்கொள்வதற்காக, அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில், ஆதி திராவிடருக்கு / பழங்குடியினருக்கு 22.5% இடஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

## பொன்விழா நகர்ப்பகுதி வேலைவாய்ப்புத் திட்டம் (சுவர்ண ஜெயந்தி சககாரி ரோஜ்கார் யோசனா) (SJSRY)

இத்திட்டம், நகர்ப்பகுதிகளில் வறுமையைத் தணிப்பதற்கான ஒரு திட்டமாகும். உள்ளூர் மக்கள் தொகையில் ஆதி திராவிடரின் / பழங்குடியினரின் எண்ணிக்கை அளவிற்கு ஏற்றவாறு, ஆதிதிராவிடருக்கு / பழங்குடியினருக்கு முன்பணம் வழங்கப்படவேண்டும்.

## துப்புரவுப் பணியாளர்களை, மனிதக் கழிவுகளை அகற்றுகிற பணியிலிருந்து விடுவித்தல் மற்றும் புதுவாழ்வு அளித்தல்

துப்புரவுப் பணியாளர்களையும், அவர்களைச் சார்ந்திருப்போரையும், தற்போதுள்ள கழிவுப் பொருள்களையும், மனிதக் கழிவுகளையும் அகற்றுகிற

பரம்பரையான மற்றும் அருவெறுக்கத்தக்க தொழிலிலிருந்து விடுவித்து, மரியாதைக்குரிய மாற்று வேலையை வழங்குவது, துப்புரவுப் பணியாளர்கள் விடுவிப்பு மற்றும் புதுவாழ்வு தேசியத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், முதற்கண், ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த அனைத்து துப்புரவுப் பணியாளர்களையும் உள்ளடக்கியுள்ளது.

## ஆணையத்தின் அமைப்பு

புதிய ஆணையத்தின் (வரிசையில் மூன்றாவது) கீழ்க்கண்டவர்கள் அடங்கியுள்ளனர். அவர்கள் பற்றிய விவரம் வருமாறு :–

| தொடர் எண் | பெயர் மற்றும் பதவிப் பெயர் | தொலைபேசி எண்கள் |
|---|---|---|
| 1. | முனைவர் பி.எல். புனியா தலைவர் | 24632298 |
| 2. | முனைவர் ராஜ்குமார் வெர்கா – துணைத் தலைவர் | 24620438 |
| 3. | திரு. ராஜீ பார்மர், உறுப்பினர் | 24624801 |
| 4. | திரு. எம். ஷிவண்ணா, உறுப்பினர் | 24623266 |
| 5. | திருமதி லதா ப்ரியகுமார், உறுப்பினர் | 24626061 |

## ஆணையத்தின் செயலகம்

| தொடர் எண் | பயர் மற்றும் பதவிப் பெயர் | தொலைபேசி எண்கள் |
|---|---|---|
| 1. | செயலாளர் (காலியாக உள்ளது) | 24620308<br>24694743<br>(நிகரி) |
| 2. | திரு. டி. தீதன், இணைச் செயலாளர் | 24635722<br>24624731<br>(நிகரி) |
| 3. | DIG (காலியாக உள்ளது) | 24615014 |
| 4. | இயக்குநர் | 24646568 |
| 5. | திரு. துருவ்குமார், இயக்குநர் | 24635424 |
| 6. | துணைச் செயலாளர் | 24631361 |
| 7. | திரு. கௌசல் குமார், துணை இயக்குநர் | 24694365 |
| 8. | திரு. எஸ்.என். மீனா சார்புச் செயலாளர் | 24629434 |
| 9. | திரு. லோகன் மராண்டி, சார்புச் செயலாளர் | 24625748 |



**கட்டணமில்லா தொலைபேசி எண் : 1800118888**
**(புதுடில்லியிலுள்ள தலைமையிடத்திற்கு)**

## தேசிய ஆதிதிராவிடர் ஆணையத்தின் மாநில அலுவலகங்கள்

| தொடர் எண் | முகவரி | தலைமையிடம் அதிகாரவரம்பு | அலுவலகத்திற்குப் பொறுப்பு வகிக்கிற அதிகாரியின் பெயர் மற்றும் பதவிப்பெயர் |
|---|---|---|---|
| 1. | பிரகதி சாலை, லேக் சௌ மோகனி,<br>அகர்தாலா – 799001 (திரிபுரா மேற்கு)<br>0381 – 2223140, 2315967 | அகர்தாலா | துணை இயக்குனர் |
| 2. | 2வது தளம், மல்லாங்கர் ஹவேலி,<br>வசந்த் சௌக், லால் தர்வாஜா<br>அகமதாபாத் – 380001<br>079–25509762, 25510717 | அகமதாபாத்<br>(குஜராத்,<br>இராஜஸ்தான்<br>டாமன் மற்றும் டையூ,<br>தாத்ரா நாகர் ஹவேலி) | திரு. துருவ்குமார்<br>இயக்குநர் |
| 3. | 3வது தளம் D, பிரிவு, CGO காம்ப்ளெக்ஸ்<br>கேந்திரிய சதன், கோரமங்களா,<br>பெங்களூர் – 560034<br>080–25537155, 25527767 | பெங்களூர்<br>(கர்நாடகா) | திருமதி சித்ரா ஆறுமுகம்<br>இயக்குநர் |
| 4. | 6வது தளம், கேந்திரிய சதன், செக்டார்<br>9 ஏ சண்டிகார் 160017<br>0172–2742561, 2743784 | சண்டிகர்<br>(அரியானா,<br>பஞ்சாப்,<br>இமாச்சலபிரதேசம்<br>ஜம்மு & காஷ்மீர் சண்டிகர்) | திருமதி விபாகுத்<br>இயக்குநர் |
| 5. | 2வது தளம், தொகுதி –5<br>சாஸ்திரிபவன், சென்னை–600 006<br>044–28276430, 28271546, 28312851 (நிகரி) | சென்னை<br>(தமிழ்நாடு<br>மற்றும் பாண்டிச்சேரி) | திரு. எ. தசரதன்<br>இயக்குநர் |

| | | | |
|---|---|---|---|
| 6. | 24 நிலமணிபுஹான்பாத்,<br>கிறிஸ்டியன் பாஸ்தி,<br>திஸ்பூர், கௌஹாத்தி,<br>781 005, 0361–2347040,<br>2346885 | கௌஹாத்தி<br>(அஸ்ஸாம், அருணாச்சல<br>பிரதேசம், நாகாலாந்து<br>மேகாலயா, மிஜோராம்,<br>மணிப்பூர்) | துணை இயக்குநர் |
| 7. | பிளாக்–204, மைத்ரிவிஹார்<br>அமீர்பேத், ஐதராபாத்<br>500 838, 040–23734907<br>(நிகரி), 23754908 | ஐதராபாத்<br>(ஆந்திரப்பிரதேசம்,<br>மத்தியப்பிரதேச்<br>சட்டிஷ்கர்) | திருமதி சித்ரா<br>ஆறுமுகம்<br>இயக்குநர்<br>(கூடுதல் பொறுப்பு) |
| 8. | மயூக்பவன் (தரைத்தளம்)<br>சால்ட்லேக், நகரம்,<br>கொல்கத்தா – 700091<br>033–23370977, 23213259 | கொல்கத்தா<br>(மேற்கு வங்காளம்,<br>ஒரிஸ்ஸா, சிக்கிம்,<br>அந்தமான் மற்றும்<br>நிக்கோபார் தீவுகள்) | துணை இயக்குநர் |
| 9. | 5வது தளம், கேந்திரிய<br>பவன், செக்டார்–H<br>அலிகஞ்ச், லக்னோ–<br>226024, 0522–2330288<br>(நிகரி) 2323860 | லக்னோ<br>(உத்திரப்பிரதேசம்<br>உத்திரகாண்டு) | திரு. ஆர்.டி.<br>சந்திரஹாஸ்<br>இயக்குநர் |
| 10. | 189–B ஸ்ரீ கிருஷ்ணாபாரி<br>பாட்னா – 800001<br>0612–2540285 | பாட்னா<br>(பீஹார், ஜார்கண்டு) | முனைவர் டி. பாசாக்<br>துணை இயக்குநர்<br>(கூடுதல் பொறுப்பு) |
| 11. | கேந்திரிய சதன் A பிரிவு<br>முதல் தளம், அகூர்தி<br>இரயில் நிலையம் எதிரில்,<br>நாக்தி பிரதிகாரன்,<br>பூனா, (புனே) 020–27658033,<br>27658973 (நிகரி) | புனே<br>(மஹாராஷ்டிரா,<br>கோவா) | திரு.எம். சிவகுமார்<br>இயக்குநர் |
| 12. | TC-24/547 (1) , சாஸ்தா<br>கார்டன்ஸ் ரெசிடென்சி<br>சாலை, அரசு விருந்தினர்<br>இல்லம் அருகில், தைகாடு,<br>திருவனந்தபுரம் – 695014<br>0471 – 2327530 | திருவனந்தபுரம்<br>(கேரளா & இலட்சத்தீவுகள்) | திரு.பி. ராமசாமி<br>உதவி இயக்குநர் |

**கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 1800 345**

**(தேசிய ஆதிதிராவிடர் ஆணையத்தின் அனைத்து மாநில அலுவலகங்களுக்கு)**